தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, மாசி 6, திருவள்ளுவர் ஆண்டு—2045

2014 பிப்ரவரி 18, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.”

ஒரு தொழிலைச் செய்வதற்கேற்ற காலத்தையும், இடத்தையும் அறிந்து செய்தால் இந்த உலகத்தையே அடைய வேண்டுமென்று நினைத்தாலும் அது கைகூடும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

63—

புதிய மின்மாற்றி

***38361—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, கணபதிபாளையம் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, கணபதிபாளையம் கிராமத்திற்கு 250 கே.வி.ஏ. திறன் கொண்ட கணபதிபாளையம் துணை மின்நிலையம் SS-1 மின்மாற்றியிலிருந்து சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், கணபதிபாளையத்தில் எந்தவொரு இடத்திலும் குறைந்த மின்னழுத்தம் இல்லை என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, அங்கு தற்பொழுது புதிய மின்மாற்றி அமைக்க அவசியம் எழவில்லை. எனினும், வருங்காலங்களில் தேவை ஏற்பட்டால் கூடுதலாக ஒரு மின்மாற்றி அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குக் கடமையாற்றுவதையே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிபாடாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் மகத்தான உண்மை. வினாடி முள்ளையும் வெல்லும் சுறுசுறுப்போடு, தமிழ் மக்களின் வாழ்வை உயர்த்துவதில் சீரக முனை அளவுகூட சிரத்தை குன்றாமல், சத்தியப் பார்வையோடு, சலியாத உழைப்போடு தாங்கள் ஆற்றி வரும் பணிகளுக்கு தமிழக மக்கள் என்றென்றும் நன்றிக்கடன்பட்டவர்கள். கடந்த ஆண்டு தாங்கள் பிறந்தநாள் பரிசாக தமிழக மக்களுக்காக காவேரியை மீட்டெடுத்தீர்கள். இந்த ஆண்டு தங்கள் பிறந்தநாள் பரிசாக பகை சூழ்ந்து நிற்கும் பாரத நாட்டை மீட்டெடுத்து, வலிமையான பாரதத்தை உருவாக்கித் தருவீர்கள் என்ற உறுதியோடு (மேசையைத் தட்டும் ஒலி) பல்லடம் தொகுதி மக்கள் சார்பாக தங்கள் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.*

2014 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதி, கரைப்புதூர், உபாயனூர் மற்றும் கணபதிபாளையம் போன்ற மூன்று ஊராட்சிகளும் இணைகின்ற பகுதிகளில் மின் அழுத்தம் மிகவும் குறைவாக உள்ளது. இந்தப் பகுதிகளிலுள்ள மின்மாற்றிகள் அடிக்கடி பழுதடைந்துவிடுகின்றன. அங்கே ஒரு துணை மின்நிலையம் அமைத்துக் கொடுத்தால்தான் மின்னழுத்தக் குறைவை முழுமையாக சரிசெய்ய முடியும். எனவே, துணை மின்நிலையம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, கணபதிபாளையம் கிராமத்திற்கு தற்போது 250 கே.வி.ஏ. திறன் கொண்ட கணபதிபாளையம் துணை மின்நிலையம் SS-1 மின்மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கும், துறையினுடைய ஆய்வு அறிக்கைக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. கணபதிபாளையத்திற்குத் தேவைப்படும் தொழிற்சாலை மின்பளு (175 HP) 130 கிலோ வாட், விவசாய மின்பளு 22 கிலோ வாட், வீடு மற்றும் வணிக மின்பளு 76 கிலோ வாட், ஆக, மொத்த மின்பளு 228 கிலோ வாட் மட்டும்தான். ஆனால், அங்கு இருக்கும் மின்மாற்றியோ 250 கே.வி.ஏ. திறன் கொண்டது. அந்த மின்மாற்றியின் அளவிற்குக் கட்டுப்பட்டுத்தான் தேவையும் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் மின்பளு தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. தற்சமயம் அங்கே புதிய மின்மாற்றி அமைப்பதற்கு ஏதுவான சூழ்நிலை இல்லை என்றபோதிலும், தற்பொழுது மின் தேவை பெருகி வருவதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளையும் ஏற்று, வருங்காலத் தேவையையும் கருத்திற்கொண்டு, முன்னேற்பாடாக ஒரு புதிய மின்மாற்றி அமைப்பதற்கான கருத்துருவை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கு துணை மின்நிலையம் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பணிகள் நிலுவையில் உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

64—

பாலம் சீரமைத்தல்

*7958—**திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரிலுள்ள குருவிக்காரன் சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகரிலுள்ள குருவிக்காரன் சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள தரைப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டு வருகிறது. உரிய ஒப்புதல் பெறப்பட்ட பிறகு, உயர்மட்டப் பாலம் கட்டத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.